PW-2

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Cross Examination of Witness

04.11.2020

அசா.2 - கருப்புசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

இவ்வழக்கின் 1 ம் எதிரியை எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. நடமாடும் கண்காணிப்பு குழுவில் என்னுடன் யார் யார் உறுப்பினர்கள் என்றால், என்னைத் தவிர ஒரு உறுப்பினரும், ஒரு டிரைவரும் சேர்ந்தவர்கள் ஆவோம். எனது உதவியாளர் பெயர் என்ன என்றால், கார்த்தி ஆகும். எனது நடமாடும் கண்காணிப்பு குழுவிற்கு நான் தலைவர் என்றால், சரிதான். 3 தேர்வு மையங்களை கண்காணிக்கும் பொறுப்பு எனக்கு கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். 3 தேர்வு மையங்களுக்கும் யார் யாரை அனுப்பியிருந்தேன் என்றால், யாரையும் அனுப்பவில்லை. நான் தான் பார்த்தேன். 12.08.2012 ம் தேதி எத்தனை மணிக்கு எனது பணியை தொடங்கினேன் என்றால், காலை 6.00 மணிக்கு எனது பணியை துவங்கினேன். நான் நேராக எந்த மையத்திற்கு சென்றேன் என்றால், அது பற்றி தற்போது ஞாபகம் இல்லை. அன்றைய தினம் எந்த பணியை முதலில் துவங்கினேன் என்றால், முதலில் சார் கருவூலத்திற்கு சென்றுவிட்டு, பின்னர் காலை 8 மணிக்கு தேர்வு மையத்திற்கு சென்றுவிட்டேன். எனது பணி பொறுப்புகள் என்னவென்றால், சார் கருவூலத்திலிருந்து

வினாத்தாள்களைப் பெற்று தேர்வு மையத்திற்கு கொண்டு சென்று Chief Invigilator அவரிடம் ஒப்படைப்பது, தேர்வு முடிந்த பின்னர் விடைத்தாள்களை சார் கருவூலத்தில் ஒப்படைப்பது போன்றவை ஆகும். எனக்கு வழங்கப்பட்ட பணிகளைப் பொறுத்து நான் யாரிடம் பொறுப்பு (Submission of Report) சொல்ல வேண்டும் என்றால், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் பொறுப்பு சொல்ல வேண்டும். சார் கருவூலத்தில் எத்தனை வினாத்தாள்களை நான் பெற்றேன் என்றால், எண்ணிக்கை எனக்கு நினைவில் இல்லை. நான் எத்தனை வினாத்தாள்களைப் பெற்றுக் கொண்டேன் என்பதற்கு சார் கருவூலத்தில் எழுதி, கையொப்பம் செய்து பெற்றுக் கொண்டேன். எந்த ஆதாரத்தில் ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் வினாத்தாள்களை ஒப்படைப்பேன் என்றால், ஒவ்வொரு வினாத்தாள்கள் அடங்கிய கட்டுகளிலும் அதற்கான குறிப்பு எழுதப்பட்டிருக்கும். அதனடிப்படையில் வழங்குவேன். 3 தேர்வு மையங்களுக்கும் யார் வினாத்தாள்களை ஒப்படைத்தது என்றால், நானே நேரில் சென்று ஒப்படைத்தேன். சம்பவம் நடைபெற்ற தேர்வு மையத்தில் நான் யாரிடம், எத்தனை வினாத்தாள்களை ஒப்படைத்தேன் என்றால், அந்த தேர்வு மையத்தின் தலைமை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தேன். எத்தனை வினாத்தாள்கள் என்ற எண்ணிக்கை ஞாபகம் இல்லை. ஒவ்வொரு மையத்திற்கும் தனித்தனி தலைமை கண்காணிப்பாளர் உள்ளனரா என்றால், சரிதான். எனது புகாரிலோ அல்லது காவல் துறை விசாரணையிலோ, தலைமை கண்காணிப்பாளர்களின் பெயர்களை குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. சம்பவம் நடைபெற்ற

தேர்வு மையத்திற்கு நான் எத்தனை மணிக்கு வந்தேன் என்றால், காலை 9.30 மணிக்கு வந்தேன். சார் கருவூலத்திலிருந்து காலை 6 மணிக்கு வினாத்தாள்களைப் பெற்று 3 தேர்வு மையங்களுக்கும் சென்று ஒப்படைத்துவிட்டு, காலை உணவு அருந்திவிட்டு, பின்னர் சம்பவம் நடந்த தேர்வு மையத்திற்கு காலை 9.30 மணிக்கு வந்து விட்டேன். சம்பவம் நடைபெற்ற தேர்வு மையத்தில் எத்தனை தேர்வறைகள் இருந்தன என்றால், அதைப் பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. வினாத்தாள்களை ஒப்படைத்து விட்ட பிறகு, விடைத்தாள்களை பெற்றுக் கொள்வது போன்றவை தவிர எனக்கு வேறு எந்த பணியும் கிடையாது என்றால், சரியல்ல. தேர்வு மையத்தில் ஏதேனும் பிரச்சனைகள் நடந்தால், அதையும் நாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். சம்பவம் நடைபெற்ற தேர்வு மையத்தில் எத்தனை தேர்வறைகள், எந்தெந்த இடத்தில் அமைந்துள்ளது என்பது பற்றி எனக்கு சரியாக தெரியாது என்றால், சரிதான். என்னிடம் கிடைத்த தமிழில் கையால் எழுதப்பட்ட வினாவிடைத்தாளினை நகலை தேர்வு மையத்திலுள்ள அசல் வினாவிடைத்தாளுடன் ஒப்பிட்டுப் பார்க்க என்னுடன் இருந்த வருவாய் ஆய்வாளர் உமாராணியை அனுப்பினேன் என்றால், சரிதான். உமாராணியை எத்தனை மணிக்கு தேர்வுமையத்திற்குள் ஒப்பீடு செய்வற்காக அனுப்பினேன் என்றால், காலை 10.30 மணிக்கு அனுப்பினேன். ஒப்பிட்டு பார்ப்பதற்காக அசல் வினாத்தாளை யாரிடமிருந்து உமாராணி பெற்றார் என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. எவ்வளவு நேரம் ஒப்பீடு செய்து பார்த்து விட்டு வந்தார் என்றால், சுமார் 10 நிமிடத்திற்குள் ஒப்பீடு செய்து பார்த்து விட்டு

வந்தார். ஒப்பீடு பார்த்த பிறகு என்னிடம் என்ன கூறினார் என்றால், கையிலுள்ள கையால் எழுதப்பட்ட வினாவிடைத்தாளின் நகலும், தேர்விற்கான அசல் வினாவிடைத்தாளும் ஒத்திட்டு செல்வதாக கூறினார். வருவாய் ஆய்வாளர் கூறிய பிறகு நான் மீண்டும் சென்று அதை ஆய்வு செய்தேன் என்றால்,சரிதான். எங்கு சென்று ஒப்பிட்டு பார்த்தேன் என்றால், முன்னால் உள்ள தேர்வறையில் சென்று பார்த்தேன். அறையை பற்றி குறிப்பாக தற்போது ஞாபகம் இல்லை. ஒப்பிட்டு பார்த்த தேர்வறையில் இருந்த அறை கண்காணிப்பாளரின் பெயரை புகாரிலோ அல்லது விசாரணையிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. நான் ஒப்பீடு செய்வதற்கு பெற்ற வினாத்தாளின் வரிசை எண் மற்றும் விவரங்கள் ஆகியவை குறித்து அறைக் கண்காணிப்பாளரிடம் கையொப்பம் பெற்றேனா என்றால், வினாத்தாளைப் பார்த்தவுடன் திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்ததால் அது குறித்து கையொப்பம் எதுவும் பெறவில்லை. ஒப்பீடு செய்வதற்காக பெற்ற வினாத்தாளை அதே அறையில் பார்த்து ஒப்பீடு செய்த பிறகு அங்கேயே கொடுத்து விட்டேன் என்றால், சரிதான். முறைகேடு நடைபெற்றதாக தெரிய வந்தவுடன் தேர்வை தொடர்ந்து எழுதாமல் தடை செய்ய வேண்டி நான் அறைக் கண்காணிப்பாளரிடமோ அல்லது உயர் அலுவலர்களிடமோ எழுத்து மூலமான புகார் கொடுத்தேனா என்றால், இல்லை. என்னுடன் இருந்த வட்டாட்சியர் நடந்த சம்பவங்களை நேரில் பார்த்து மாவட்ட ஆட்சியரிடம் கூறிவிட்டார். மீதமுள்ள 2 தேர்வு மையங்களுக்கும் இது குறித்து தகவல் கொடுத்தேனா என்றால், இல்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு சம்பவங்கள்

எதுவும் நடைபெறவில்லை என்றும், போலீசார் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 26, 27, 28, 29, 30 ஆகிய எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை:</u>**

12.08.2012 ம் தேதி தேர்விற்கான வினாத்தாளை 05.08.2012 ம் தேதி மாலை 5.45 மணிக்கு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கையொப்பம் செய்து பெற்றுள்ளார் என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. TNPSC தேர்விற்கான வினாத்தாள்கள் அரசு சார் கருவூலத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டது என்றால், சரிதான். TNPSC தேர்விற்கான வினாத்தாள்கள் அனைத்தும் அரசின் சொத்துக்கள் என்றால், சரிதான். 12.08.2012 ம் தேதி நடைபெற்ற TNPSC தேர்விற்கான வினாத்தாள்களை சார் கருவூலத்திலிருந்து பெற்று தேர்வு மையங்களுக்கு கொண்டு சென்று ஒப்படைக்கம் பொறுப்பு என்னுடையது என்றால், சரிதான். வினாத்தாள்களை என்னிடமிருந்து தேர்வு மையத்தில் பெற்றுக் கொள்ள வேண்டிய கடமையும், பொறுப்பும் யாருடையது என்றால், தேர்வு மையத்தின் தலைமை கண்காணிப்பாளருடையதாகும். 12.08.2012 ம் தேதி தேர்விற்கு எனக்கென ஒதுக்கப்பட்ட தேர்வு மையங்கள் 3 என்றால், சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட நடமாடும் கண்காணிப்பு குழுவில் எனக்கென்று உதவியாளர் மற்றும் ஓட்டுநர் இருந்தார்கள் என்றால், சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்தின் பதிவு எண் என்னவென்றால், அது பற்றி ஞாபகம் இல்லை. அது அரசு வாகனம் என்றால், சரிதான். அது அரசு வாகனம்

என்ற நிலையில் அதற்கு லாக் புத்தகம் பராமரிக்கப்பட வேண்டும் என்றால், சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட 3 தேர்வு மையங்கள் எது வென்றால், கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஆர்.கோபிநாதன்பட்டி ஸ்ரீகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவை ஆகும். கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலிருந்து ஆர்.கோபிநாதன்பட்டி ஸ்ரீகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரி தேர்வு மையத்திற்கு இடைப்பட்ட தூரம் எவ்வளவு, எவ்வளவு நேரத்தில் சென்றடைய முடியும் என்றால், 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சுமார் ½ மணி நேரத்தில் கிராம சாலை வழியாக அரசு வாகனத்தில் சென்றடைய முடியும். கம்பையநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலிருந்து ஆர்.கோபிநாதன்பட்டி ஸ்ரீகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரி தேர்வு மையத்திற்கு இடைப்பட்ட தூரம் எவ்வளவு, எவ்வளவு நேரத்தில் சென்றடைய முடியும் என்றால், அதே 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சுமார் ½ மணி நேரத்தில் கிராம சாலை வழியாக அரசு வாகனத்தில் சென்றடைய முடியும். எனக்கு ஒதுக்கப்பட்ட நடமாடும் கண்காணிப்பு குழுவிற்கு வழங்கப்பட்ட அதிகாரம் என்னவென்றால், அதிகாரங்கள் என்று TNPSC ஆல் எதுவும் எங்களுக்கு வழங்கப்படவில்லை. மாவட்ட வருவாய் அலுவலரால் எனக்கு குறிப்பிட்ட அதிகாரம் எதுவும் அந்த தேதியில் வழங்கப்படவில்லை என்றால், தேர்வை முறையாக நடத்த வேண்டும் என்பதும், முறைகேடுகள் எதுவும் நடைபெறாவண்ணம் கண்காணித்துக் கொள்ள வேண்டும் என்பதுமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. தேர்வு

கண்காணிப்பு குழுவினரைத் தவிர வேறு யாருக்கும் தேர்வறைக்குள் கண்காணிக்கும் பணி வழங்கப்படவில்லை என்றால், சரியல்ல. ஏற்கனவே 09.07.2018ம் தேதியன்று கனம் ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றத்தில் இதே வழக்கைப் பொறுத்து சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். அ.சா.ஆ.3 மாவட்ட வருவாய் அதிகாரியின் செயல்முறை ஆணையில் தேர்வு எழுதப்படும் சமயத்தில் தேர்வறைக்குள் செல்லும் அதிகாரம் எனக்கு வழங்கப்படவில்லை என்றால், சரியல்ல. அ.சா.ஆ.3 மாவட்ட வருவாய் அதிகாரியின் செயல்முறை ஆணையில் தேர்வறையின் கண்காணிப்பு குழுவில் எனது பெயர் இடம் பெற வில்லை என்றால், சரிதான். அன்றைய தினம் 3 தேர்வு மையங்களிலும், தேர்வறை கண்காணிப்பாளர்களாக யார் யார் இடம் பெற்றிருந்தார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. தேர்வறை கண்காணிப்பாளர்களுக்கான கண்காணிப்பு குழு யாரால், எத்தனை மணிக்கு அமைக்கப்பட்டது என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. தேர்வறை கண்காணிப்பாளர்களுக்கான கண்காணிப்பு குழுவுக்கு என்று தனியாக பட்டியல் தயாரிக்கப்படும் என்றால், சரிதான். எனது புகாரிலும், காவல் துறை விசாரணையிலும் அவ்வாறான பட்டியல் பற்றிய விவரங்களும், பட்டியலில் யார் யார் இடம்பெற்றுள்ளார்கள் என்ற விவரத்தையும் கூறவில்லை என்றால், சரிதான். தேர்வு மையங்களில், தேர்வு நடைபெறும் சமயங்களில் நானோ, எனது உதவியாளர்களோ நுழையலாம் என்பதற்கு எந்த வித அதிகாரமும் எனக்கு வழங்கப்படவில்லை என்றால், சரியல்ல. எனக்கு உதவியாக வந்த வருவாய் ஆய்வாளர், தேர்வு சமயங்களில் தேர்வறைகளில் நுழைய எழுத்துப்பூர்வமான

அதிகாரம் இல்லை என ஏற்கனவே நான் JM3 ஈரோடு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். அதேபால் நானும், தேர்வு சமயங்களில் தேர்வறைகளில் நுழைய எழுத்துப்பூர்வமான அதிகாரம் உள்ளதாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்றால், சரிதான். JM3 ஈரோடு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்ததில் சம்பவ தேதியான 12.08.2012 ம் தேதி காலை 10 மணி முதல் பகல் 1 மணி வரை நான் தேர்வறைக்குள் செல்லவில்லை என கூறியுள்ளேன் என்றால், சரிதான். 12.08.2012 ம் தேதி வினாத்தாள்களை 3 தேர்வு மையங்களிலும், யார் யார், எத்தனை மணிக்கு என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள் என்றால், அது தற்போது ஞாபகம் இல்லை. 12.08.2012 ம் தேதி வினாத்தாள்களை 3 தேர்வு மையங்களிலும், யார் யார், எத்தனை மணிக்கு என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள் என்ற விவரத்தை புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ நான் கூறவில்லை என்றால், சரிதான். முதன் முதலில் எந்த தேர்வு மையத்திற்கு நான் சென்றேன், வினாத்தாளை யாரிடம் ஒப்படைத்தேன் என்றால், ஞாபகம் இல்லை. அதற்குரிய ஆவணங்களை TNPSC அதிகாரிகள் பெற்றுக் கொண்டார்கள். ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் ஒரு TNPSC அதிகாரி நியமிக்கப்பட்டார் என்றால், சரியல்ல. தர்மபுரி மாவட்டத்திற்கென இரண்டு TNPSC அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அந்த TNPSC அதிகாரிகள் யார் யார் என்ற விவரம் காவல் துறை விசாரணையிலோ, புகாரிலோ சொல்லப்படவில்லை என்றால், சரிதான். அந்த 2 TNPSC அதிகாரிளும் தேர்வு மையத்தில் இருந்தார்களா அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

இருந்தார்களா என்றால், சார் கருவூலத்தில் இருந்தார்கள். TNPSC அதிகாரிகள் சார் கருவூலத்தில் இருந்தபோது வினாத்தாள்கள் வெளியானதாக சொல்லப்படும் சம்பவத்தைப் பொறுத்து நான் கூறவில்லை என்றால், சரிதான். தாசில்தார் கூறிவிட்டார். தாசில்தார் TNPSC அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்ததாக விவரத்தை புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ அல்லது JM3 ஈரோடு நீதிமன்ற சாட்சியத்திலோ நான் கூறவில்லை என்றால், சரிதான். சார் கருவூலத்திலிருந்து வினாத்தாள்களை வாங்கி வருவதையும், மீண்டும் விடைத்தாள்களை ஒப்படைப்பதுமான பணிகளை என்னைத் தவிர வேறு யாரிடம் செயல்முறை ஆணைப்படி வழங்கப்படவில்லை என்றால், சரிதான். அன்றைய தினம் தேர்வை மையத்தை எத்தனை மணிக்கு திறக்க வேண்டும் என உத்தரவு ஏற்பட்டிருந்ததா என்றால், 6 மணியிலிருந்து 7 மணிக்கு திறக்கப்படவேண்டும் என மாவட்ட ஆட்சியரின் உத்தரவாகும்.

(எதிரி தரப்பு வேண்டுகோளின் பேரில் சாட்சியின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)